




கிருஷ்ணகிரி முதல் நீலகிரி வரை மேற்கு மண்டலத்தில் உள்ள 21 கழக மாவட்டங்களில், 61 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் கிளைவார்டுகளுக்கும் பாகங்களுக்கும் இளைஞர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை மேற்கொள்ளும் வகையில், இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் 9 பேருக்கும் தலா 2 கழக மாவட்டங்கள் என பிரித்தளிக்கப்பட்ட நிலையில், அவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து பெற்ற நிர்வாகிகள் பட்டியலை, இளைஞர் அணி தலைமையகமான 'அன்பகத்தில்' வழங்கி வருகின்றனர். அங்கு அவர்கள் மேற்கொண்ட பணிகளை, 13.10.2025 அன்று கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அறிக்கையாக வழங்கி, கள நிலவரம் குறித்து விளக்கினர். மேலும் இந்தக் கூட்டத்தில் மற்ற மண்டலங்களிலும் இந்த முறைப்படியே நிர்வாகிகளைத் தேர்வுசெய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.







கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. அந்த வகையில், சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆயிரம்விளக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் மாநில துணைச் செயலாளர் ஜோயல் முன்னிலையில், அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருகின்ற 2026 தேர்தலை எப்படி எதிர்கொள்வது, அவற்றில் இளைஞர்களுக்கான பணிகள் என்ன, SIR போன்ற முன்னெடுப்புகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின் இளைஞர்களிடம் எடுத்துரைத்துப் பேசினார். ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிற்றரசு, பிரகாஷ் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பகுதி செயலாளர் அன்பு துரை ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் Minute Book வழங்கப்பட்டது.

### ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு!

# நம் பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக்.15-

ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்து, 14 ஆயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவுள்ளதாக அறிவித்ததையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

**இதுதான் திராவிட மாடலின் செயல்பாடு. தமிழ்நாட்டைத் தேர்வு செய்தமைக்காகவும், எங்களுடன் இணைந்து எதிர்காலத்தை வடிவமைக்க முடிவெடுத்தமைக்காகவும் நன்றி. தமிழ்நாட்டைத் தெற்காசியாவின் உற்பத்தி மற்றும் புதுமைக்கான மையமாக உயர்த்துவதற்கான நம் பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு)!

## வலைதளத்தில் – முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக்.15-

நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தன் பாரதி! அனைவருக்கும் எடுத்துக்காட்டான காந்திய வாழ்வு!**

**விடுதலைப் போராட்ட வீரர் மொழிப்போர்த் தீரர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் பெயரன், விடுதலைப் போராட்டத் தியாகிகள் கிருஷ்ணசாமி பாரதி, லட்சுமி பாரதி ஆகியோரின் மகன் என நாட்டுக்காக உழைத்த குடும்பத்தின் வழித்தோன்றலாகப் பிறந்து, 16 வயது மாணவராக விடுதலைப் போராட்டத்தில் தொடங்கி, மதுரை மாவட்ட ஆட்சியர், தலைவர் கலைஞரின் முதல் தனிச் செயலாளர் எனப் பரந்த பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான அவரை வாழ்த்தி மகிழ்கிறேன்.**

**நாட்டுப்பற்றில் உறுதி, மக்கள் தொண்டில் நாட்டம், எளிமை என நானிலமும் போற்றும் நற்பண்புகளைக் கொண்ட லட்சுமி காந்தன் பாரதி அவர்களது வாழ்க்கையை, இன்றைய தலைமுறை தனக்கான பாடமாகக் கொள்ள வேண்டும்.**

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.